**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.246** **நாள்: 27.06.2026**

**மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அவர்கள் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, சாஸ்திரி நகர் பகுதியில் பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கிட உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.**

மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அவர்கள் சென்னை, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, வார்டு-99, சாஸ்திரி நகர் பகுதியில் பொதுமக்களின் பல்வேறு கோரிக்கை மற்றும் தேவைகள் தொடர்பாக இன்று (27.06.2026) நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும் தொகுதி மக்களின் தேவைகள் மற்றும் குறைகளை கேட்டறிந்து அதனை உடனுக்குடன் சரி செய்திட அறிவுறுத்தியுள்ளார்கள் அதன் அடிப்படையில் மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள், எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, வார்டு-99, சாஸ்திரி நகர் பகுதி முழுவதும் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் தேவைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

சாஸ்திரி நகரில் வேகத்தடை அமைத்து தருதல், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக தடையின்றி குடிநீர் வழங்குதல் உள்ளிட்ட பணிகள் செய்திட மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பொதுமக்கள் கோரிக்கை தெரிவித்தனர். இக்கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அப்பொழுது சில நேரங்களில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருவதாக பொதுமக்கள் தெரிவித்த புகாரினைத் தொடர்ந்து, பாதுகாப்பான குடிநீர் மக்களுக்கு வழங்கிட உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**